# பிரதான நூலகம், கொழும்புப் பல்கலைக்கழகம்

## பாதுகாப்பு அறிவுறுத்தல்கள்

**உங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு சகல வாசகர்களும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

- பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை **எப்போதும்** உங்களுடன் வைத்திருத்தல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வடையாள அட்டையின்றி யாரும் நூலகத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- இந்நூலகமானது மறு அறிவித்தல் வரை **திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** திறந்திருக்கும். **காலை 8.30 மணியிலிருந்து மாலை 3.30 மணி வரை** புத்தகங்கள் பெறப்படவோ மீளளிக்கப்படவோ முடியும். அத்துடன் வார இறுதி நாட்களில் இந்நூலகமானது மூடப்பட்டிருக்கும்.

- கீழ்த்தளத்தில் அமைந்துள்ள Learning Commons மறு அறித்தல் வரை மூடப்பட்டிருக்கும்.

- இது வரை காலமும் ஓரிரவுக்குக் கடனளிக்கப்பட்ட உசாத்துணை நூல்கள் (Reference books) தற்போது காலை 8.30 மணியிலிருந்து பெறப்படகூடியதாக இருப்பதுடன் அவற்றை இரண்டு இரவுகளுக்குக் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

- உங்கள் உடைமைகளை நூலகத்தின் முன்வாயிலில் வைப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன் நூலகத்தின் பின்புறத்திலமைந்துள்ள **cloak room** ஐ இத்தேவைக்காக உபயோகிக்கவும்.

- அவசர காலங்களில் மின்னுயர்த்தியை (lift) உபயோகிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும்.  இவ்வாறான அடையாளங்களைப் பின்பற்றுவதன் மூலம் மாடிப்படியை அடையவும்.

- அவசர காலங்களில் ஒரு விசேட மணி அடிக்கப்படும். இது உங்களை இக்கட்டடத்தை விட்டு வெளியேறவோ அல்லது நூலகப் பணியணியினரின் அறிவுறுத்தல்களுக்கேற்ப நடக்குமாறோ கூறுவதாக அமையும்.

- அவசர காலங்களில் இக்கட்டடத்தை விட்டு வெளியேறுவதற்கு கீழ்த்தளத்திலோ அல்லது முதலாம் தளத்திலோ விசேடமாக அடையாளமிடப்பட்டுள்ள **வாயில்களைப் (Exits)** பயன்படுத்துமாறு நீங்கள் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

- மறு அறிவித்தல் வரை பின்வரும் பொருட்கள் **நூலகத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டாது**: தண்ணீர்/ எந்தவொரு வகையான பானங்கள்/போத்தல்கள், மடிக்கணனி (Laptop) மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள், எல்லா வகையான பற்றரிகள் (rechargeable or non-rechargeable), பற்றரி சார்ஜேஸ், மின்கம்பி (wires), லைட்டேஸ் (lighters), கூரிய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (கத்தி, கத்தரிக்கோல், என்பன), உலோக மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் (பென்சில் பெட்டிகள் உட்பட), தீப்பெட்டி, சவர்க்காரம், அழகுசாதனப்பொருட்கள், ஜெல் (gels), எல்லாவகையான மருந்துப்பொருட்கள், ஒக்சிடைசேஸ் மற்றும் ஓர்கானிக் பெரொக்சைட்ஸ், ஏனைய இரசாயனப் பொருட்கள், காந்த வகைகள்.

- உங்கள் உடைமைகளை நூலகத்தினுள் கண்காணிக்காது விடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

- நூலகத்தின் வெளிப்புறப்பகுதியில் (corridors) உட்கார்ந்திருத்தல் மற்றும் நடத்தல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும்.

- நூலகத்தினுள்ளேயும் அதன் சுற்றுப்புறங்களிலும் புகைப்படங்கள் மற்றும் வீடியோப் புகைப்படங்கள் (Selfie உள்ளடங்கலாக) எடுத்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும்.

- சந்தேகத்திற்கிடமான முறையில் யாரேனும் நபர்களோ, செயற்பாடுகளோ, பொருட்களோ, ஆவணங்களோ அல்லது மேலே தடைசெய்யப்பட்ட பொருட்களோ, செயற்பாடுகளோ நூலகத்தினுள்ளேயோ அல்லது அதன் சுற்றுப்புறத்திலோ அவதானிக்கப்படுமிடத்து, உடனே அதனை நூலகரினது (0714434638) அல்லது சிரேஷ்ட உதவி நூலகர் II/வாசகர் சேவைகளினது (0718393111) அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நூலக சேவைகளினது (0713894325) கவனத்திற்குக் கொண்டுவருவதற்குத் தயங்காதீர்கள்.

**இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்திற்கு வருந்துகின்றோம்**

**உங்கள் சுற்றாடலைக் கண்காணித்து அமைதியாகவும் அவதானமாகவும் பாதுகாப்பாகவும் செயற்படவும்**

நூலகர்

கொழும்புப் பல்கலைக்கழகம்